# பாடம் - 1



# 1. பாஸ்கா விழா

**I.** **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : விடுதலைப் பயணம் *12:1–11***


**II.** **கேள்வி - பதில்**

1. இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக வாழ்ந்த நாடு எது?

2. கீரையின் சுவை என்ன?


3. இடையில் கட்டியிருந்தது என்ன?

**III.** **பாஸ்கா விழாவின்போது இஸ்ரயேல் மக்கள் வைத்திருந்தவற்றை வட்டமிடுங்கள்**



**IV.** **மனப்பாடம் : விடுதலைப் பயணம் 12:11**

## பாடம் - 2



# 2. கூடாரப் பெருவிழா

**I.** **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : லேவியர் *23:33-36***


**II.** **கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஆண்டவரின் ................................ பெருவிழா

2. பெருவிழா ................................ நாள்கள் நடைபெறும்


3. ஆண்டவருக்கு ................................ செலுத்துங்கள்

**III.** **புள்ளிகளை இணைத்துப் பாருங்கள்**



**IV.** **மனப்பாடம் : லேவியர் 23:34**

## பாடம் - 3



# 3. திருக்கோவில் அர்ப்பணவிழா

I. **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : *2 குறிப்பேடு 7:6–10***

II. **சரியான விடை உள்ள கட்டத்தில் ✓செய்க**

1. ஆண்டவருக்கு நன்றி செலுத்த இசைக்கருவிகளை உருவாக்கியவர்

| தாவீது | சாலமோன் | சவுல் |
|---|---|---|

2. திருக்கோவில் அர்ப்பண விழாவினை சாலமோன் தொடர்ந்து கொண்டாடிய நாள்கள்

| ஐந்து | ஏழு | ஒன்பது |
|---|---|---|

3. இசைக்கருவிகளை இசைத்தவர்கள் இவர்களே

| அரசர்கள் | பாடகர்கள் | லேவியர் |
|---|---|---|

III. **கட்டங்களில் உள்ள எழுத்துகளை வரிசைப்படுத்தி வாக்கியம் அமைத்திடுக**

| ர | ட | ஆ | து | வ | ண் |
|---|---|---|---|---|---|

| பு | ர | பே | ன் |
|---|---|---|---|

| று | றெ | எ | ம் | ன் | ன் |
|---|---|---|---|---|---|

| து | ள் | உ | ள |
|---|---|---|---|

IV. **சரியான படத்தை வண்ணமிடுக**




IV. **மனப்பாடம் : 2 குறிப்பேடு 7:6**

# பாடம் - 4



# 4. இயேசு பிறப்பின் அறிவிப்புப் பெருவிழா

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : லூக்கா *1:26–38***

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. கன்னி மரியாவிடம் கடவுளால் அனுப்பப்பட்ட வானதூதர் ...............................
2. மரியா வாழ்ந்த ஊரின் பெயர் ...............................
3. மரியா ............................... என்பவருக்கு மண ஒப்பந்தமானவர்.
4. இது எப்படி நிகழும் நான் ............................... ஆயிற்றே.
5. கடவுளால் இயலாதது ............................... இல்லை.

(**விடைகள் :** யோசேப்பு, கபிரியேல், ஒன்றும், நாசரேத்து, கன்னி)

**III. விளையாட்டு**

மூன்று சீட்டுகளில் மிக்கேல், கபிரியேல், இரபேல் என்று எழுதி ஆண் பிள்ளைகளை ஆளுக்கொன்று எடுக்கச் சொல்லவும். அடுத்து மூன்று சீட்டுகளில் மகதலா மரியா, எலிசபெத்து, கன்னிமரியா என்று எழுதி பெண் பிள்ளைகளை ஆளுக்கொன்று எடுக்கச் சொல்லவும். (ஆண்கள், பெண்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தால் ஆறு சீட்டுகளையும் ஆண்களையோ, பெண்களையோ எடுக்கச் சொல்லலாம்). கன்னி மரியா என்ற சீட்டை எடுத்தவரை அழைத்து எல்லாரும் பார்க்கும் விதத்தில் முழந்தாளிடச் செய்யவும். பின்னர் கபிரியேல் என்ற சீட்டை எடுத்தவரை அழைத்து 8 - 10 அடி தூரத்தில் சற்று உயரமான இடத்தில் மரியா பக்கம் தனது வலது கையை ஆசியளிக்கும் விதத்தில் நீட்டி நிற்கச் செய்யவும். பொதுக்கால மூவேளை மன்றாட்டை ஒரு பிரிவினர் முதல் பகுதியையும் இன்னொரு பிரிவினர் அடுத்த பகுதியையும் சொல்லி வேண்டல் செய்ய ஆசிரியர் வழிகாட்டுவார். பின்னர் விளையாட்டு பற்றி விளக்கம் அளிப்பார்.

**V. மனப்பாடம் : லூக்கா 1:38**

# பாடம் - 5



# 5. இயேசுவின் பிறப்புப் பெருவிழா

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : லூக்கா *2:8–14***

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக**


1. உன்னதத்தில் கடவுளுக்கு ............................... உரித்தாகுக.
2. இரவெல்லாம் தங்கள் கிடையைக் காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் ...............................
3. குழந்தையைத் துணிகளில் சுற்றித் ............................... தொட்டியில் கிடத்தியிருந்தனர்.
4. இன்று ஆண்டவராகிய ............................... என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்.

**III. சரியான பதிலைக் கண்டுபிடித்து ✓செய்க.**

1. இடையர்கள் தங்கி இருந்த இடம்
   (வெட்டவெளி, வயல்வெளி, புல்வெளி)
2. "இதோ! எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன் என்று கூறியவர்.
   (வானதூதர், ஆண்டவரின் தூதர், இறைவனின் தூதர்)
3. உலகில் அவருக்கு உகந்தோருக்கு உண்டாவது
   (எழுச்சி, மகிழ்ச்சி, அமைதி)

**V. மனப்பாடம் : லூக்கா 2:13-14**

# பாடம் - 6



# 6. திருக்காட்சிப் பெருவிழா

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : மத்தேயு *2:1–12***

**II. சரியான விடையைக் கண்டுபிடித்து ✓ செய்க**

1. கிழக்கிலிருந்து எருசலேமுக்கு வந்தவர்கள்

   அ) அறிஞர்கள் ஆ) ஞானிகள் இ) அரசர்கள்

2. இயேசுவின் பிறப்புச் செய்தியைக் கேட்டதும் கலங்கிய அரசன்

   அ) ஏரோது ஆ) பார்வோன் இ) நெபுகத்னேசர்

3. ஞானிகளுக்கு வழிகாட்டியது

   அ) சந்திரன் ஆ) விண்மீன் இ) வான்கோள்

4. இயேசு பிறந்த ஊர்

   அ) பெத்லகேம் ஆ) நாசரேத்து இ) அயின்கரிம்

**III. விடுகதைக்குப் பதில் சொல்லுங்கள்**


1. இயேசுவின் பிறப்பு அரசனைக் கலங்க வைத்தது. அரசனும் கலங்கினான். ஆள்களும் கலங்கினார்கள். இந்த நகரும் கலங்கிற்று. எந்த நகர்?

2. ஆண்டவனைத் தேடி அரண்மனை சென்றவர்கள். காணிக்கைகளைக் கையிலேந்தி கடவுளைக் காண விரும்பியவர்கள். கனவில் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு சென்றவர்கள். யார் இவர்கள்?

3. மாட, மாளிகையில் இல்லாமல் மாட்டுத்தொழுவத்தில் பிறந்தவர், யூதர்களின் அரசர் எனப் பெயர் பெற்றவர், ஞானிகளால் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கப்பெற்றவர், இந்த உலகை ஆளப் பிறந்தவர். யார் இவர்?

**V. மனப்பாடம் : மத்தேயு 2:11-12**

## பாடம் - 7




# 7. ஆண்டவரின் திருவிருந்துப் பெருவிழா

**I.** **வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : மாற்கு *14:22–26***



**II.** **வினா - விடை**

1. இயேசு எதை எடுத்து கடவுளைப் போற்றினார்?
2. இதைப்பெற்று உண்ணுங்கள் என்று இயேசு யாருக்குக் கொடுத்தார்?
3. பலருக்காகச் சிந்தப்படுவது எது?
4. புகழ்ப்பாடல் பாடிவிட்டு எந்த மலைக்குச் சென்றார்கள்?

**III.** **இயேசுவோடு உணவருந்திக் கொண்டிருந்த சீடர்கள் எண்ணிக்கையை வட்டமிடுக**





**IV.** **மனப்பாடம் : மாற்கு 14:22ஆ-24**

# பாடம் - 8



# 8. இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : மாற்கு *16:1–8***

**II. சரியான விடையை ✓ செய்யவும்**

1. பெண்கள் இயேசுவின் உடலில் பூசுவதற்காக வாங்கியவை

   அ) எண்ணெய் சிமிழ்கள் ஆ) நறுமணப் பொருள்கள்

   இ) சந்தனக் கட்டிகள்

2. வெண் தொங்கல் ஆடை அணிந்திருந்தவர்

   அ) மூவர் ஆ) இருவர்


   இ) ஒருவர்

3. பெண்கள் கல்லறையை விட்டு வெளியே வந்து பிடித்தது

   அ) ஓட்டம் ஆ) ஆட்டோ

   இ) வண்டி

**III. இயேசுவின் கல்லறைக்குச் செல்ல பெண்களுக்கு வழிகாட்டுங்கள்**



**IV. இப்பாடத்தில் வரும் பெயர்களை, இடங்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக**


**எருசலேம் பெண்கள் நாசரேத்து கல் எம்மாவு**

**மெல்லியதுணி கல்லறை மோசே யோசேப்பு**

**இருவர் இயேசு கலிலேயா**

**V. மனப்பாடம் : மாற்கு 16:6-7**

# பாடம் - 9



# 9. பெந்தக்கோஸ்து பெருவிழா

**I. வாசிக்க வேண்டிய இறைவார்த்தை : *திருத்தூதர் பணிகள் 2:1–4***

**II. சரியான விடையை ✓செய்க**

1. பெந்தக்கோஸ்து என்பதன் பொருள்

   அ) நாற்பதாவது நாள்    ஆ) இருபதாவது நாள்

   இ) ஐம்பதாவது நாள்

2. திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று இரைச்சல் எதில் உண்டானது

   அ) மேகத்தில்    ஆ) வானத்தில்


   இ) மலை உச்சியில்

3. தூய ஆவியின் தூண்டுதலால் ஒவ்வொருவரும் பேசியவை


   அ) வழிகள்    ஆ) மொழிகள்


   இ) கலைகள்

**III. கீழே உள்ள படங்களில் பாடத்துடன் தொடர்புடையவற்றை வட்டமிடுக**









**V. மனப்பாடம் : திருத்தூதர் பணிகள் 2:4**

# வருகைப் பதிவேடு படம்

*தயாரிப்பு & வெளியீடு :* **தமிழக விவிலியப் பணிக்குழு, முப்பணி மையம், திண்டிவனம் - 604 001.**

இரண்டாம் ஆண்டு (B)

# விடுமுறை
# விவிலியப் பள்ளி

**மாணவர் பயிற்சி ஏடு**

**முதல் குழு – விருப்ப நிலை (UKG, I, II வகுப்புகள்)**

# விவிலியத்தில் விழாக்கள்





பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

..................................